திருக்கோவிலூர் கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு கபிலர் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் நினைவு தூண்களை திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா. இளந்திரையன், இரா.கற்பகம், செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், இந்திய கம்யூனிஸ்ட் ஏ.வி.சரவணன், நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி செயலாளர் சுந்தரமூர்த்தி, நகர மன்ற துணை தலைவர் உமாமகேஸ்வரி குணா, மாவட்ட பிரதிநிதி சடகோபன், நகர மன்ற உறுப்பினர்கள் கோவிந்த், சக்தி, வெங்கடேசன், பூபதி, தங்கராஜ், கந்தன் பாபு, வெங்கட், சரவணன், ஜெகன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் சண்முகம், நகர நிர்வாகிகள் கண்ணன், சங்கர், அண்ணாதுரை , இளைஞர் அணி பாலமுருகன், நவநீதகிருஷ்ணன், வழக்கறிஞர் நிஜாம், பள்ளி கல்வி துறை நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், தலைமை ஆசிரியர் உள்ளிட்ட ஆசிரியர் பெருமக்கள், மாணவர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.

நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் தொகுதியில் பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் வெப்படையில் 45 ஆவது துவக்க விழாவை முன்னிட்டு 60 அடி கொடிக் கம்பத்தில் கழக நிறுவனக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார். விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கழக இரு வண்ண கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நடனசபாபதி, பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய செயலாளர் ஆர்.செல்வம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை!

தி.மு.க.வின் கொள்கைகளை, திராவிட மாடல் ஆட்சியை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்!

வெப்படையில் நடந்த கொடியேற்று விழாவில் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பேச்சு!

நாமக்கல், ஜூலை 22- முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் 1980 ஜூலை 20 ஆம் தேதி ஜான்சி ராணி பூங்காவில் தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்ட நாளை நினைவு கூறும் வகையிலும் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக சார்பில், திருச்செங்கோடு, மல்லசமுத்திரம், காளிப்பட்டி, குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றும் விழா நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் தொகுதியில் பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் வெப்படையில் 45 ஆவது துவக்க விழாவை முன்னிட்டு 60 அடி கொடிக் கம்பத்தில் கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் நடனசபாபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய செயலாளர் ஆர். செல்வம் வரவேற்புரை ஆற்றினார்.

விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கழக இரு வண்ண கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், பேரறிஞர் அண்ணா வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்து வந்தார். அவரது வழியில் தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே முதன் மாநிலமாக, முன்னோடி மாநிலமாக திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்தியாவிலேயே 40க்கு 40 தொகுதிகளை வென்ற ஒரே கட்சி திராவிட முன்னேற்ற கழகம். அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயலாற்றி வருகிறார். இளைஞர் அணி தோழர்கள் திராவிட மாடல் ஆட்சியையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் செயல்பாட்டையும் ஒவ்வொரு கிராமங்களிலும் வீடு வீடாக மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களாக இருப்பது பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம்.

இந்த 4 முக்கியமான தூண்களால் எழுப்பப்பட்ட கோட்டை தான் திராவிட முன்னேற்ற கழகம். இந்த கோட்டையின் தலைவர்கள் தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தமிழ்நாட்டின் அடையாளம் இந்தியாவின் அடையாளம் தமிழர்களின் அடையாளம் உலக தமிழர்களின் பெருமை நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கழகத் தலைவராக பொறுப்பேற்ற திலிருந்து தொடர்ந்து வெற்றிகளை குவித்து கொண்டே வருகிறார். தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை காக்கிற ஒரே இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம். வருங்காலம் இளைஞர்களின் கையில் உள்ளது. இளைஞர்கள் வழிநடத்த வேண்டும். கழக இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழியில் திமுகவின் கொள்கைகளையும், செயல்பாடுகளையும் மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் பணியில் இளைஞர் அணியினர் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும். கழகத் தலைவர் மு க ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் இளைஞர்களும் இணைந்து இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமையை நிலை நாட்டோம் என்று அமைச்சர் மா.மதிவேந்தன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நாச்சிமுத்து, இளங்கோவன், நகர கழகச் செயலாளர்கள் குமார், விஜய்கண்ணன், ஞானசேகரன், பொதுக்குழு உறுப்பினர் ஓ ஆர் செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் கார்த்திக்ராஜ், ராமமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் முரளி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழக முதலமைச்சர் பொதுமக்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு

எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்!

அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, ஜூலை 22- புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றியம் முனசந்தையில் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார் . பின்னர் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்திடும் திட்டத்தை 11.07.2024 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இம்முகாம்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தித்துறை உள்ளிட்ட பல்வேறு 15 அரசுத் துறைகள் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்பட்டது. இம்முகாம்களில் பெறப்பட்ட அனைத்து மனுக்களும் சம்பந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்கப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

எனவே பொதுமக்கள் அனைவரும் இம்முகாம்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்களது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் கலைவாணி சுப்பிரமணியன், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன். இராமலிங்கம், இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

முதலமைச்சரின் உத்தரவுப்படி - கடும் மழையால் பாதிக்கப்பட்ட

அனைவருக்கும் தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன!

நீலகிரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டபின் அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

நீலகிரி, ஜூலை 22 - நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் சந்தித்து, அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து, நிவாரண பொருட்களை வழங்கினார்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியம், சேரங்கோடு ஊராட்சி, சேரம்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் சந்தித்து, அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து, நிவாரண பொருட்களையும், 14 குடும்பங்களுக்கு தனது சொந்த நிதியிலிருந்து தலா ரூ.2,000 ரொக்கத்தினையும் வழங்கினார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் ஆலோசனையின்படியும், மாவட்ட நிர்வாகம் தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தென்மேற்கு பருவமழை தீவிரத்தின் காரணமாக பல்வேறு இடங்களில் அதிக மழை பெய்து வருவதால், சில இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. மேலும், மழையின் காரணமாக மண் சரிவு மற்றும் வீடுகள் சேதமடைந்ததால், பந்தலூர் வட்டத்திற்குட்பட்ட திருவள்ளுவர் நகரில் வசிக்கும் பொதுமக்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டு, வருகிறது.

இன்றைய தினம் நிவாரண முகாமில் தங்கியுள்ள திருவள்ளுவர் நகர், அண்ணா நகர் மற்றும் நெல்லிகுண்ணு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 14 குடும்பங்களுக்கு தேவையான நிவாரண பொருட்கள் மற்றும் எனது சொந்த நிதியிலிருந்து தலா ரூ.2,000 ரொக்கமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், முகாமில் தங்கியுள்ள பொதுமக்களின் நலன் கருதி, மருத்துவ முகாம் ஒன்றும் நடத்தப்பட்டுள்ளது. மண் சரிவு மற்றும் வீடுகள் சேதமடைந்த திருவள்ளுவர் நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வாழ்வதற்கு ஏதுவாக உள்ளதா என ஆய்வு செய்ய வேண்டும் என கோரிக்கை முன்வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மூலம் புவியல் துறைச் சார்ந்த அலுவலர்கள் களஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நீலகிரி மாவட்டத்தில், கடந்த 24 மணி நேரத்தில் ஏறக்குறைய 6 வீடுகள் பகுதி சேதமடைந்துள்ளது. பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர்களுக்கு தலா ரூ.8,000 நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல 6 இடங்களில் தடுப்புச்சுவர்கள் சேதமடைந்தும்,

7 இடங்களில் மரங்களும், 2 இடங்களில் மண்சரிவும் ஏற்பட்டது. உடனடியாக நெடுஞ்சாலைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்துறை மற்றும் மாநில பேரிடர் மீட்புக் குழுவினர்கள் மூலம் மரங்கள் அகற்றப்பட்டு, மண்சரிவும் சீர்செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் மழையின் காரணமாகவும், பாதுகாப்பு நலன் கருதியும், சேரம்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் திருவள்ளுவர் நகரைச் சேர்ந்த 14 குடும்பங்களும், கூடலூர் தொரப்பள்ளியில் 12 குடும்பங்களும், குந்தா குட்டிமணி நகர் பகுதியைச் சேர்ந்த 1 குடும்பம் என மொத்தம் 27 குடும்பங்களைச் சேர்ந்த 90 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், பந்தலூர் வட்டாட்சியர் கிருஷ்ணமூர்த்தி, கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயசங்கர், ஆறுமுகம், சேரங்கோடு ஊராட்சித்தலைவர் திருமதி.லில்லி இலியாஸ், கூடலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி, திட்டக் குழு உறுப்பினர்கள் ஜார்ஜ், ராஜேந்திரன் உட்பட பலர் உடனிருந்தனர்.

காவிரியில் நீர் திறப்பு அதிகரிப்பு:

மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 7 அடி உயர்வு!

சேலம், ஜூலை 22- கர்நாடகாவில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள நீர்நிலைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. கடலோர மாவட்டங்கள் மற்றும் மலை மாவட்டங்களில் வெளுத்து வாங்கும் மழையின் காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. குடகு மாவட்டத்தில் தயார் நிலையில் பேரிடர் மீட்பு குழுவினர் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் அங்குள்ள பல்வேறு ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் காவிரி மற்றும் பல்வேறு ஆறுகளின் கரையோரத்தில் வசிக்கும் பொதுமக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரித்து காணப்படுவதால் தமிழக எல்லையான பிலிகுண்டு பகுதிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக ஒகேனக்கல் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. இந்த தண்ணீர் நேரமாக காவிரி ஆற்றில் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடு வென உயர்ந்து வருகிறது.

காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 7.6 அடி உயர்ந்துள்ளது. ஒரே வாரத்தில் 26.15 அடி உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் நீர் வரத்து வினாடிக்கு 68,843 கன அடியாக இருந்த நிலையில், நேற்று காலை நிலவரப்படி 71,777 கன அடியாக வந்து கொண்டிருக்கிறது.

அச்சக தொ.மு.ச. பொதுச் செயலாளர் எஸ்.வி. பிரபாகர் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மதுரையில் அரசு அச்சக தொ.மு.ச. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா - நல உதவிகள்!

கிளை அச்சக தொ.மு.ச. பெயர்ப்பலகையை திறந்துவைத்து கோ.தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

மதுரை, ஜூலை 22- மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவும், மதுரை அரசு கிளை அச்சகம் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்கத்தின் பெயர் பலகை திறப்பு மற்றும் கொடியேற்று விழா - சென்னை அரசு அச்சக தொ.மு.ச. பொதுச்செயலாளர் எஸ்.வி.பிரபாகர் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நாளை நடைபெறுகிறது. விழாவில் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார். சங்க நிர்வாகிகள் இவ்விழாவில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

அரசு அச்சக தொ.மு.ச. சார்பாக அச்சக தொ.மு.ச. பொதுச்செயலாளர் எஸ்.வி. பிரபாகர் ஏற்பாட்டில் மதுரை கிளை அச்சக தொ.மு.ச. பெயர் பலகை திறப்பு விழாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவும் நல உதவி திட்டங்களும் வழங்கி மதுரை மாநகர மாவட்ட கழக செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றிட உள்ளார்.

இவ்விழா மதுரை அரசு கிளை அச்சகத்தில் இன்று (22.7.2024, திங்கள்கிழமை) காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

இவ்விழாவில், தலைமை தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுச்சாமி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, சட்டத்துறை துணைச் செயலாளர் பா. நம்பிச்செல்வன், சட்ட ஆலோசகர் செ.வெண்மணி, திருமதி ச.புவனேஸ்வரி சரவணன், வடக்கு மண்டல தலைவர் திருமதி ஆ.முத்துக்குமாரி ஆழ்வார், 10வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.கருணாநிதி, மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் ஏ. ஜெய்சங்கர், அரசு அச்சக தொ.மு.ச. சென்னை க. இசக்கி முத்து, வடக்கு மண்டலத் தலைவர் என். நாகூர் கனி, மதுரை சிறுபான்மைதுணை அமைப்பாளர் எ.வேலு, புதூர் வட்டச் செயலாளர் புதூர் பி. செல்வம், மாநகர் மாவட்ட வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் ஆர். பிரபாகரன், மதுரை இளைஞர் அணி துணை அமைப்பாளர் மு.தமிழ் சந்திரன், தலைமை ஏற்று நடத்துபவர் அரசு கிளை அச்சக மதுரை செயலாளர் எம்.ரவிச்சந்திரன், முன்னிலை அரசு கிளை அச்சக தொ.மு.ச. தலைவர் ஏ.செல்வக்குமார், வரவேற்புரை மதுரை கிளை அச்சக தொ.மு.ச. சு. வெங்கடேஷ்பாபு, மதுரை கிளை அச்சக தொ.மு.ச. நிர்வாகிகள், சென்னை அரசு அச்சக தொ.மு.ச. நிர்வாகிகள் மற்றும் கிளை அச்சக தொ.மு.ச. நிர்வாகிகள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.